**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 31 January 2018

# வாழ்க்கைத்தொழில் ஆயத்த படிப்பில் 500 மாணவர்கள்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் 500க்கும் அதிகமான மாணவர்கள் புதிய வாழ்க்கைத் தொழில் ஆயத்தப் படிப்பைக் கற்கிறார்கள். இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர்களிடம் வேலைச் சந்தைக்குத் தேவையான தேர்ச்சி களை ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்தப் படிப்பு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது.

இந்த 12 வார படிப்பில் பட்டக் கல்வி மாணவர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது ஆண்டில் சேரலாம். வாழ்க்கைத் தொழிலுக் குத் திட்டமிடுவதில் இந்தப் படிப்பு ஒருமித்த கவனம் செலுத் துகிறது.

ஒவ்வொரு மாணவரும் தனிப் பட்ட முறையில் தனது வாழ்க் கைத்தொழில் வழிகாட்டித் திட் டத்தை வடிவமைத்துக்கொள்ள இந்தப் படிப்பு வழி காட்டுகிறது. வேலை பார்ப்பதற்குத் தேவைப் படும் தேர்ச்சிகளை மாணவர்களி டம் இப்படிப்பு ஏற்படுத்துகிறது.

'வாழ்க்கைத்தொழில் உந்து சக்தி' என்ற இந்தப் படிப்பு, 2016ல் நடைமுறைக்கு வந்த 10 வார கால 'வேர்களும் இறக்கை களும்' என்ற அடிப்படை செயல் திட்டத்திற்கு உறுதுணையாகத் திகழ்கிறது. அந்தத் திட்டம் புதிய பட்டதாரிகள் சுய புரிந் துணர்வு, தகவல்தொடர்பு போன்ற வற்றில் தேர்ச்சி பெற உதவுகிறது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் மூத்த துணைத் தலைவர் ஹோ டெக் ஹுவா நேற்று இந்தப் பல்கலைக்கழக வாழ்க்கைத் தொழில் விழாவின்போது இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

புதிய படிப்பு, மாணவர்கள் தங்கள் வாழ்க்கைத்தொழிலை முன்னதாகவே திட்டமிட உதவும் என்று அவர் கூறினார்.

நேற்றைய வாழ்க்கைத்தொழில் விழா வேலைச் சந்தையில் 260க்கும் அதிக முதலாளிகள் 4,000க்கும் அதிக வேலை வாய்ப்பு களை முன்வைத்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.